சக்ரவர்த்தினி.

“ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ”

VOL-10. தொகுதி-10 | May மே 1915 | No-10. பகுதி-10.

† அக்கமுங் காசுஞ் சிக்கெனத் தேடு.

மக்கள் பசி, நோய், குளிர் முதலியவற்றால் வருத்தமுறாது வாழ்வதற்குரியனவா யிருப்பன தானியமும் பொருளுமாம். நெல் கேழ்வரகு முதலிய தானியங்களைப் பெறாதவிடத்து மக்கள் பசியால் வருந்தி மாள்வது நிச்சயமாம். பொருளில்லாவிடத்து நம்மனோர் நட்பினர்பகைவர் அயலாரென்னும், முத்திறத்தாராலும் இகழப்படுதல் பிறழாததாம். பசியை யொழித்துக் கொள்வதற்கு நெல் கேழ்வரகு முதலிய தானியங்களும், நோய் குளிர்முதலியவற்றை யொழித்துக் கொள்வதற்குப் பொருளும் இன்றியமையாது வேண்டுவனவாயிருத்தலின், அவ்விரண்டனையும் இல்வாழ்வார் விரைவாகத்தேடிச் சேர்த்துவைத்துக் கொள்ளல்வேண்டும். இல்வாழ்வார் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, ஆதாரமானவரால் விடப்பட்டவர், மறுமையுடையார், ஒருவருமின்றித் தம்

---

† அக்கம் - சுற்றத்தாரையும், காசும் - (அவரை யுபசரித்தற் கேதுவாய) பொருளையும், சிக்கென - விரைவாக, தேடு - (நீ) தேடக்கடவாய் என்றிதற்குப் பொருள் கூறுவாருமுண்டு. அறிவு நூலார், அக்கமும்-தத்துவஞானத்தையும். காசும் - (அதன்பயனாயபொன்றாப்) பொருளையும், சிக்கென - விரைவாக, அஃதாவது முப்பதுவயது முடிவதற்குள், தேடு - நீ தேடக்கடவாய் என்றிதற்குப் பொருள் கூறுகின்றனர். பொன்றாப்பொருள் - மோட்சம்.

மிடத்து வந்திறந்தவர், பிதிரர், கடவுளர், விருந்தினர், உறவின ரென்னும் பதின்மர்க்கும் தமக்குள்ள உணவையும் பொருளையும் பகுத்துக்கொடுக்க வேண்டியவராக விருத்தலின், அவர்கள் மறவாது தமக்கும் பிறர்க்கும் உதவியாதற்குரிய தானியத்தையும் பொருளையும் வருந்தியுழைத்து விரைவாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது சொல்லாமலே விளங்குவதாம்.

தானியமென்பது தானியமேயன்றித் தானியம் விளைதற்குரிய நிலத்தையும், பொருளென்பதுபொருளேயன்றிப் பொருள் கொண்டு வாங்குவனவாய உடை உறையுள் முதலியவற்றையும் உணர்த்துவனவாம். இவற்றைப் பழிபாவங்களுக்குப் பயந்து முதுமைப்பருவம் வந்து துன்புறுத்துவதற்கு முன்னே சேர்த்து வைத்துக்கொள்பவர் முதுமைப்பருவத்தில் பசி, நோய், குளிர் முதலியவற்றால் வருந்துவது பெரும்பான்மையு மில்லையாம்.

இளமைப்பருவத்தில் இல்லறத்திற்கு இன்றியமையாது வேண்டுவனவாகிய நெல்முதலியன விளைதற்குரிய நிலத்தையும், பொருளையும் தமது முயற்சியால் தேடியவர் தாமிறக்குமளவும் வறுமைக்கிடமாய் வாழ்வதின்மையின், இல்வாழ்வார் தமதில்லறவொழுக்கத்தைக் கடைபோகச் செய்தற்பொருட்டும், தாமிறக்குமளவும் வறுமைக்கிடமாகாது வாழ்தற்பொருட்டும் அவ்வப்போது வேண்டிய தானியங்களையும், எப்போதும் உடைமுதலியன வாங்குவதற்குரியதாயுள்ள பொருளையும் விரைவாகத்தேடுவதவசியமாமன்றோ? முதுமைப்பருவம் விரைந்துவந்து தேகவன்மையைக் குறைத்து எந்தத்தொழிலையும் செய்வதற்கு ஆற்றலில்லாதவராக நம்மையாக்கிவிடுமென்பதை யடிக்கடி சிந்தனைசெய்து வருபவர் என்னசெய்வர்? முதுமைப்பருவத்தில் தாம் வருத்தமுறாதிருத்தற் பொருட்டு உணவிற்குரிய தானியம் விளையும் நிலத்தையும் அவ்வப்போது உடை முதலியன வாங்குவதற்குரிய பொருளையும் விரைந்துதேடுவரன்றோ? இவற்றை விரைந்து தேடுகின்றவர் தமக்கேயன்றிப் பிறர்க்கும் பயனுடையவராயிருப்பர். தானியத்தையும் பொருளையும் தமக்கே பயனுமாறு சேர்ப்பவர் அவற்றின் பயனை முற்றுமடைவது கூடாமையின், அவற்றைத்தமக்கும் பிறர்க்கும் பயனுமாறு சேர்க்க நம்மனோர் முயலுதல்வேண்டும்.

தானியத்தையும், பொருளையுஞ் சேர்க்கும் வகையில் வெயில் மழை பனியென்பனவற்றை நோக்கிப் பின்னர்ப் பார்

275

த்துக் கொள்ளுவோமென்று ஒருபோதும் சோம்பியிருப்பது கூடாது. சோம்பலை யொழித்துத் தானியத்தையும் பொருளை யும் தேடிவருபவர் தம்மை யுயர்த்துவதேயன்றித் தங்குடியிற் பிறந்தவரையும் உயர்த்துகின்றவ ராகின்றனர். முதுமைப்பருவம் வருவதற்குமுன்னே அத்தியாவசியகமாகத் தேட வேண்டுவனவற் றைத் தேடியவர் எந்நலத்தினைப் பெறுதொழிவார்? அவர் நலங்க ளெல்லாவற்றையும் பெறுவாரென்பதற்கு ஐயப்பாடு முண்டோ? தானியத்தையோ அதுவிளையும் நிலத்தையோ பொருளையோ அஃதெப்போதும் வருதற்குரிய வழியையோ பெற எப்போதும் முயன்றுவருதல் வேண்டும். "முயற்சி திருவினை யாக்கும்—முய ற்சி செல்வத்தினை வளர்க்கும்" ஆதலால், முயற்சியுடையவர் தன தானியங்களை யடைவதில் குறைவுடையவராவ தில்லையாம்.

தனம் தானியம் என்னுமிரண்டனுள் மக்களுக்கு மிக அவசிய மாயிருப்பது தானியமேயாதலின், அதனைவேண்டுமளவாக அவ் வப்போது சேர்த்துவைத்துக் கொள்ளுதல் வேண்டும்; கூடுமா யின், தானியம், விளைதற்குரிய நிலத்தையும் தேடுதல் நன்றாம்; அதன்பின்னர்ப் பொருளைத்தேடி வேண்டுமளவிற்குச் சேர்த்து வைத்துக்கொள்ளல் வேண்டும்; பொருளைத்தேடும்போது வீண் செலவுசெய்யாதிருத்தல்வேண்டும். பொருளைத்தேடும்போது அத னைப் பாதுகாவாது அசட்டைசெய்துவருபவன் முதுமைப்பருவத் தில் வறுமைக்கு வாய்ப்பான தோழனாவது திண்ணமாம்.

மக்கள் முதுமைப்பருவம் வருவதற்குமுன்னே பழிபாவங் களுக்குப்பயந்து, தனதானியங்களைச் சோம்பலை யொழித்துத் தேடி, அவற்றை வீண்செலவுசெய்யா திருப்பாராயின், அவர்கள் எல்லா நலங்களையும் பெறுதற்குரியவராவ ரென்பது தோன்றவே, நமது ஞானத்தாயாராகிய ஔவைபிராட்டியார் ஆத்திசூடியில் "அக்கஞ் சுருக்கேல்" "பருவத்தே பயிர் செய்" "நெற்பயிர் விளை" "பூமி திருத்தியுண்" "பொருடனைப் போற்றிவாழ்' என்றருளிச் செய்ததனோடமையாது கொன்றைவேந்தனில் "அக் கமுங் காசுஞ் சிக்கெனத் தேடு—நீ தானியத்தையும் பொருளையும் விரைவாகத் தேடக்கடவாய்" என்றருளிச் செய்தனர்.

பொருளிருக்குமாயின், எதுதான் முடியாது? முன்னர்த் தானியத்தைக் கூறுவானேனென்று ஆசங்கித்தல் கூடும். ஒருவன் தன்வீடு நிறையப் பொருளைச் சேர்த்துவைத் திருப்பா

ளுயின், அதனாலவன்பசிப்பிணி யொழிவதாமோ? அன்பந்தருவன வற்றுள் பசிப்பிணிக்கு ஒத்ததேனும் உயர்ந்ததெனுமின்மையின், அதனையொழித்தற்குரியதானியத்தை யத்திியாவசியகமாகத்தேடுதல் வேண்டுமென்று வற்புறுத்தவே, நமது ஞானத்தாயார் தானியம் என்னும் பொருள் தரும்பதத்தை முன்னர்வைத்து 'அக்கமுங் காசுஞ் சிக்கெனத் தேடு' என்றருளிச் செய்தனர்.

"அக்கமுங் காசுஞ் சிக்கெனத்தேடு"ம் முயற்சியுடையவர் "மேழிச்செல்வங் கோழை படாது - ஏர்பிடித்துழுதலாலுண்டாகின்ற செல்வம் ஒருபோதுந் தாழ்வடையாது" என்று ஔவைப் பிராட்டியார் அருளியிருப்பதனையும் உட்கொண்டு, தாமுழுது பயிர் செய்தலையோ பிறரைக்கொண் டுழுவித்துப் பயிர் செய்தலையோ மேற்கொண் டொழுகுவாராயின், அவரிடத்துப் பொருள் தானே வழிகேட்டுவந்து சேர்வதாம். பொருள் சேர்ப்பதற்குரிய சாதனங்களுள் உழுது அல்லது உழுவித்துப் பயிர்செய்தல் தலையாயதாயிருத்தலின், அதனை மேற்கொண டொழுகுதல் ஒவ்வொருவர்க்கு முக்கியமாய கடமையாம். இத்தொழில் செவ்வையாக நடைபெறுதவிடத்து மற்றத்தொழில்களுள் எதுவும் செவ்வையாக நடைபெறுததாம்.

"உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்று, தெழுவாரை யெல்லாம் பொறுத்து - அவ்வுழுதலைச்செய்ய மாட்டாது பிறதொழிற்கண்மேற் செல்வார் யாவரையுந் தாங்குதலால், அதுவல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர்" என்று திருக்குறள் கூறுகின்றவாறு, உலகத்தார் நிலைபெற்று வாழுதற்குக் காரணமாயிருப்பவர் உழுது பயிர்செய்து தானியத்தைச் சேர்த்துவைத்திருப்பவராவ ரென்பது நன்கு விளங்குதலின், தானிய முடையவரே பொருளுடையவராய் வாழுவரென்பதாம்.

(பொருள்) இல்லெனை இரப்போர், இடனின்று (ஆதாரமில்லாது) இரப்போர், (உள்ளபொருள்) தொலைவாகி யிரப்போர் என்று இரப்போர் முத்திறத்தினரா யிருப்பதற்குக் காரணம் யாது? அஃது அன்னார் அக்கமுங்காசுஞ்சிக் கெனத்தேடாதுசோம்பியிருந்தமையேயாம். ஒவ்வொருவரும் அக்கமுங்காசுந் தேடுவதில்பெரு முயற்சியுடையவரா யிருப்பாராயின், எவரும் † நல்குரவுடையவராய் நடுங்குவதில்லையாம். நல்குரவுண்டாகும்போது, செல்வர்

† நல்குரவு—தரித்திரம்,

கடைநோக்கிச் சேறற்றுன்பம், அவரைக் காண்டற்றுன்பம், கண்டால் மறுத்துழி நிகழுந்துன்பம், மறுவழியும் அவர் கொடுத்தது வாங்கற்றுன்பம், அதுகொடுவந்து ‡ நுகர்வன கூட்டற்றுன்பம் முதலாயின நாள்தோறும் வேறுவேறாக வருவனவா யிருத்தலின், அவை யுண்டாகாவாறு அக்கமும்காசுஞ் சிக்கெனத்தேடி வாழுதலே அறிவுடையார்க் கழகாம்.

"†பொன்னொடு மணியுண் டாயின் புலையனுங் கிளைஞ னென்று, தன்னையும் புகழ்ந்து கொண்டு சாதியின் மணமுஞ்செய்வர்' என்று பெரியார் கூறுவதை நன்குணர்ந்து, ¶ மெய்வருத்தம் பசி முதலிய வற்றைக் கருதாது, முதுமைப் பருவம் வருவதற்குமுன்னே விரைவாக அவ்வப்போது வேண்டும்தானியங்களையும், அவை விளைதற்குரிய நிலங்களையும், உடைமுதலிய வற்றிற்கு வேண்டும் பொருள்களையும் பழிபாவங்களுக்குப் பயந்து தேடி, அவற்றைத் தக்கவாறு பாதுகாத்து வருபவர் இம்மையிற் புகழையும் மறுமையிற் புண்யலோகத்தையும் அடைவாரென்பது நிச்சயமாம்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந், தொழுதுண்டு பின்செல் பவர் - யாவருமுண்ணும்வகை உழுதலைச் செய்து, அதனாற்றாமுமுண்டு வாழ்கின்றாரே தமக்குரியராய் வாழ்கின்றவர்; மற்றையாரெல்லாம் பிறரைத்தொழுது அதனாற்றாமுண்டு அவரைப் பின்செல்கின்றவர்."

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும், பொருளல்ல தில்லை பொருள்—ஒருபொருளாக மதிக்கப்படாதவரையும் மதிக்கப் படுவாராகச்செய்யவல்ல பொருளையொழிய ஒருவனுக்குப் பொருளாவதில்லை."

என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற்பாலதாம்.

---

‡ நுகர்வன - உணவிற்குரியபொருள்கள்.

†பொன்னொடுமணி- தனமும் தானியமும். மணியென்பது இங்குத் தானியமாம்.தனதானிய சம்பத்தென்று அறிஞர் கூறுமாறுணர்க. ¶ மெய் - உடம்பு.

20-ம் பாடம்.

உடை.

ஜீரணமான ஆகாரங்கள் வாயிலாகக் கிடைத்த கரியானது நமது சரீரத்திற்குள்ளே எங்கும் பிராணவாயுவால் எரிக்கப்படுகின்றது. அதனால், சரீரத்திற்கு உஷ்ணமும், பலமும் உண்டாகின்றன. மனிதன், மிருகம், பக்ஷி இவற்றின் தேக உஷ்ணம் எத்தேசத்திலும், எக்காலத்திலும் மாறுவதில்லை. மனிதனுடைய தேக உஷ்ணம் எப்போதும் ஏறக்குறைய 37 அம்சம் என்று சொல்லியிருக்கிறோம். வெளிக்காற்று கோடைக் காலத்தில் மிகவும் உஷ்ணமாகவும், குளிர் காலத்தில் மிகவும் குளிர்ச்சியாகவும் இருக்கின்றது. ஆகையால் நாம் சதா நமது தேகத்தை விட உஷ்ணமான அல்லது குளிர்ச்சியான வாயு மண்டலத்தில் ஜீவிக்கின்றோம். நம்முடைய சரீரத்தின் தோலானது தான் மூச்சு விடுவதுமன்றி, வாயு மண்டலத்தின் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தகுந்த அளவாக வேர்வையை உற்பத்தி செய்து கொண்டு, தேக உஷ்ணம் மாறாவண்ணம், அதனைக் காக்கின்றது. இக்காரியத்திற்கு அநுகூலமாகவே உடைகளும் ஏற்பட்டன. குளிர் தேசத்திலும், குளிர் காலத்திலும், மனிதன் தன்னுடைய தேக உஷ்ணத்தைக் காப்பாற்றும் பொருட்டு, கம்பளி, பட்டு முதலியவற்றாலான உடைகளை அணிந்துகொள்ளுகிறான். கோடைக்காலத்திலே பஞ்சு உடை.

நல்ல உடைகள் முக்கியமாக இரண்டு குணங்கள் பொருந்தி இருத்தல் வேண்டும். அவையாவன:—

1. சரீர வளர்ச்சி, இரத்த ஓட்டம், மூச்சு விடுதல் முதலிய காரியங்களுக்கு இடைஞ்சல் இல்லாத விதமாக உடைகள் அமைதல் வேண்டும்.

இந்த விஷயத்தில், புருஷர்களின் உடை ஸ்திரீகளின் உடையை விடச் சிலாக்கியமாம். மேல் நாட்டு ஸ்திரீகளுக்கு, நெருக்கமான பாதரக்ஷைகளிலும், இறுக்கமான கச்சைகளிலுமே மிகுந்த பிரியம். இவ்விதமான உடைசௌக்கியத்திற்கு விரோதமாம். சிறு வயதிலேயே, காலை மிகுந்த கஷ்டத்தோடு நெருக்கிச் சிறிதாக்கிக் கொள்ளும் சீன ஸ்திரீகளின் ஆசாரமும், உடலைச் சிறிதாகக் காட்ட வேண்டிக்கடினமும், இறுக்கமுமான கச்சுக்களை அணிந்து

கொள்ளும் ஐரோப்பிய ஸ்திரீகளின் ஆசாரமும், சுகாதார சாஸ்திரிகளாலும் சங்கங்களாலும் கண்டனம் செய்யப்பட்டு வருகின்றன.

2. உடைகள், தேக உஷ்ணத்தைக் காப்பதற்குத் தகுந்த விதமாக அமைதல் வேண்டும்.

எந்த உடைகளிலே சாதாரணக் காற்று அதிகமாகத் தங்குமோ, அந்த உடைகளை நம்முடைய தேக உஷ்ணத்தைக் காப்பதற்குச் சிலாக்கியமானவை. ஆட்டுமயிர்களும், பக்ஷிகளின் இளஞ் சிறகுகளுமே மேன்மையான போர்வைகளாம். அவற்றிற்குள் தங்கும் காற்றே அப்பிராணிகளின் தேகத்தை ஆதரிக்கின்றது. அதனாலே, தான குளிர் தேசத்திலும் குளிர்காலத்திலும் மனிதர் கம்பளி உடைகளை அணிந்து கொள்ளுகிறார்கள். பஞ்சு உடைகள் அவ்வளவு சிலாக்கியமானவையல்ல. இரண்டு பனிக் கட்டித் துண்டுகளை எடுத்து, ஒன்றைப் பஞ்சுத் துணியிலும் மற்றொன்றைக் கம்பளியிலும் மூடி வைத்தால், பஞ்சுத்துணியாலே மூடப்பட்ட பனிக்கட்டி சீக்கிரமாக உருகிக்கரைந்து போம்; கம்பளிக்குள்ளிருக்கும் பனிக்கட்டி அவ்வளவு விரைவாக உருகாது.

எந்த உடையும் சுத்தமாக இருத்தல் அவசியமாம். சுத்தமான உடையே தேக உஷ்ணத்தை நன்றாய்க்காக்கும். அழுக்குப் படிந்த உடைகளிலே, காற்றுத் தங்குவதற்குஇடமில்லையல்லவா? அவ்வுடைகளால் கெடுதியே பொழிய, சுகமில்லை. "கூழானாலும் குளித்துக்குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்னும் பழமொழி ஞாபகத்திலிருக்க வேண்டும்.

உடைகளின் நிறத்தையும் தெரிந்தெடுத்தல் வேண்டும். உஷ்ண தேசத்திலே வசிப்பவர்கள் வெண்மையான உடைகளை அணிகிறார்கள். வெண்மையான உடை வெயிலில் சூடாகாது. வர்ண உடைகள், முக்கியமாகக் கருமை நிறம், சூட்டை உட்கொள்ளும். அதனால் அவை சீக்கிரமாக உஷ்ணமாகி விடும்.

குழந்தைகளின் உடை.

சிசுக்களின் சரீரம் மிகவும் நுட்பமானதால், அவற்றிற்குச் சுலபமாகச் சீதளம் ஏற்படும். ஆகையால், உஷ்ணமான உடைகளை அவற்றிற்குத் தகுதியானவை. மேலும், சிசுக்களின் சரீரம் சதா சலித்துக் கொண்டிருக்கும். அதனால் அவற்றின் உடைகள் அச்

சாதனத்திற்குத் தடைகளாகஇராமல் தாராளமாகவும், மிருது வாகவும் இருத்தல் வேண்டும்.

21-ம் பாடம்.

வாசஸ்தானம்.

வாயு மண்டலத்தின் சீதோஷ்ணத்தால் உபத்திரவமில்லா திருக்கும் பொருட்டு, நம்முடைய சரீரத்துக்கு மூன்று கவசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதல் கவசம் தோல்; இரண்டாவது கவசம் உடை; மூன்றாவது கவசம் வீடு. தோலும், உடையும் எங்ஙனம் நமது சரீரத்தை மூடி அதனை ஆதரிக்கின்றனவோ, அங்ஙனமே வீடும் நம்மை ஆதரிக்கின்றது; ஆனால் வீடு ஒரு விசாலமான கவசம்; அது, மழை, பனி, குளிர், காற்று, வெயில் முதலியவற்றால் ஏற்படக் கூடிய தொந்தரவுகளை நீக்கும்.

முதல் முதல் வாசஸ்தானம் எவ்விடத்தில், எவ்விதமாக அமைதல் நன்று என்பதை விசாரிப்போம்.

வாசஸ்தானம் சதுப்பு நிலத்தில் அமைதல் கூடாது. அது மிகவும் காய்ந்திருக்கவேண்டும். அநேகமாய் வீடு தெற்கு அல்லது கிழக்குநோக்கி இருப்பது நன்றாம். அதன் சமீபத்தில், குட்டைகள், சதுப்புநிலங்கள் முதலியன இருத்தல்கூடாது. அவை இருந்தால், முறைக்காய்ச்சல், நரம்புவலிமுதலிய நோய்கள் உற்பத்தியாம். குப்பைத்தொட்டி, சுடுகாடு, கல்லறை இவற்றிற்குச்சமீபத்திலே வசித்தலும் தவறும். அங்கே அஸ்திஜ்வரம், விஷபேதி இவற்றின் கிருமிகள் ஏராளமாக விருத்தியாகிக்கொண்டிருக்கும்.

ஒரு சிறு தோப்பினருகில் வீடுகட்டிக்கொண்டு வசித்தல் சுகமாம். ஏனென்றால், நம்முடைய சுவாசத்தினின்று உண்டாகும் கரியமில வாயு தாவரங்களுக்கு ஆகாரமாகையால், அங்கே காற்று எப்போதும் பரிசுத்தமாகவே இருக்கும். இதனால் பட்டணங்களைவிடக் கிராமங்களே சுகமான வாசஸ்தலங்கள் என்று நன்றாக விளங்குகிறது. எந்தக் கிராமங்களிலே வீடுகள் ஒன்றோடொன்று சேர்ந்து, நெருக்கமாக இராமல், விசாலமான தோட்டங்களோடு தனித்தனியாக இருக்கின்றனவோ, அந்தக் கிராமங்களிலே நோய் கிடையாது. அவை தாம் மிகவும் சௌக்கியமா

னவை. அவற்றிலே வசிப்பவர்களும் திடமான சரீரத்துடன் விளங்குவார்கள். சௌக்கியமான வீடு எங்ஙனம் இருத்தல் வேண்டும்? பின் வரும் ஏழு குணங்களும் பொருந்திய வீடே சுகமாக வசிப்பதற்குத் தகுதியானது.

1. வீட்டின் தரை, சுவர் முதலிய பாகங்கள் ஓதமில்லாதிருத்தல் வேண்டும்.

ஆகையால், கிராமங்களில் கொஞ்சம் உயரமான இடங்களிலே வீடுகள் அமைத்தல் நன்றும். கட்டடத்திற்கு வேண்டிய வஸ்துக்களும் (செங்கல், சுண்ணாம்பு முதலியன) நன்றாக வெந்து, காய்ந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், அவை ஈரத்தை உட்கொண்டு உளுத்துப்போம். உளுத்துப்போன சுவரையுடைய வீடு அசௌக்கியத்திற்குக் காரணமாகும்.

பட்டணங்களிலே, புதிதாகக்கட்டப்பட்ட, நன்றாகக்காயாத ஈரமான சுவர்களையுடைய வீடுகளுக்குக் குடிபோதல்கூடாது. வாடகை கொஞ்சம் மிகுதியாருந்தாலும், அதை லக்ஷியம் பண்ணாமல், நல்ல வீடுகளிலே வசித்தல் நலமாம். வாடகையில் மிச்சம் பிடித்த பணம் வட்டிபோடு வைத்தியனிடம் செல்லும். நோயின் உபத்திரவம் இலாபம். எவ்வளவு நஷ்டம்! என்னகஷ்டம்! பாருங்கள்.

2. வீட்டிலே சூரியன் தாராளமாகப் பிரவேசித்தல் வேண்டும். சூரியன், நோய்க்கிருமிகளை ஒழிப்பதில் சமர்த்தன். அவன் பிரதிதினமும் நம்முடைய நன்மைக்காகவே காய்கின்றான். கூடுமான வரையில், வீட்டின் ஸகல பாகங்களிலேயும் எவ்வளவுக்குச் சூரியன் நடமாடுகிறானே அவ்வளவுக்குச் சௌக்கியமாம். சூரியன் நுழையாத வீட்டில், வைத்தியன் அடிக்கடி நுழைவான்.

3. வீட்டுக்குள்ளே, காற்று தாராளமாக நடமாடும் பொருட்டு, விசாலமான ஜன்னல்களை அமைத்தல்வேண்டும்.

ஒரு வீட்டிற்கு எத்தனை துவாரங்கள் அமைக்க முடியுமோ, அத்தனையும் அமைத்தல் நன்று. ஒரே வாயிலையுடைய வீட்டில் காற்றோட்டமிராது. ஆகையால் வீட்டினுடைய அறைகளுக்குக் கூடுமானால் நான்கு புறமும், குறைந்தது இரண்டு புறமாயினும் ஜன்னல்கள் இருக்கவேண்டும். நம்முடைய தேசத்திலே, ஒரே வீட்டில் அநேக குடும்பங்கள் இருண்ட, நெருக்கமான, ஜன்னல்களில்லாத அறைகளிலே வசிக்கின்றன. அக்குடும்பங்களின்

ஸௌக்கியத்தைப்பற்றிக் கேட்பானேன்? சதாநோயுள்ள தம்பதிகளும், பலஹீனமான குழந்தைகளுமே காணப்படுகின்றார்கள்.

4. வீட்டின் அறைகள் கூடியவரையில் விசாலமாக இருத்தல் வேண்டும்.

அப்போதுதான் அதனுள் வசிப்பவர்களுக்குப் போதுமான காற்று கிடைக்கும். அறை சிறிதாகவும், அதில் வசிப்பவர்களின் தொகை பெரிதாகவும் இருந்தால் மூச்சடைப்புமுதலிய அஸௌக்க்கியங்கள் ஏற்படும்.

5. ஒரேவீட்டில் அநேக குடும்பங்கள் வசித்தல்கூடாது. ஒரு வீட்டில் வசிக்கக்கூடிய ஜனத்தொகைக்கு ஒரு வரையறை உண்டு. ஒரே வீட்டில் அநேக குடும்பங்கள் நெருக்கமாகக் குடியிருந்தால், அங்கே மரணத்தொகை அதிகமாகும். ஐயோ! எத்தனையோ குடும்பங்கள், தம்முடைய வீட்டிலுள்ள விசாலமான அறைகளை விட்டுவிட்டு, நெருக்கமான அறைகளையே படுக்கை அறைகளாக உபயோகிக்கிறார்களே! என்ன அறிவீனம்! விசாலமான அறைகளைக் கௌரவத்திற்காக வைத்திருக்கிறார்கள் போலும்! குடிகாரத் தொழிலாளி, தான் சம்பாதிப்பதில் முக்கால் பங்கைச் சாராயக் கடைகளிலே தொலைத்துவிட்டு, தன்பெண்சாதி பிள்ளைகளோடு அசுத்தமான தெருக்களிலே, நெருக்கமான குடிசைகளில் வசிக்கின்றானே. என்ன பரிதாபம்! காற்றும், வெளிச்சமுமில்லாத குடிசைகளில, நோயால் வருந்திக்கிடக்கும் குடும்பங்கள் வறுமையினால் நசித்து, சாராயக்கடைகளும், சூதுக்கடைகளும் சிறப்பான அலங்காரங்களுடன் ஓங்குகின்றனவே!

6. பட்டணங்களில் மெத்தைகள்மீது வசித்தல் வேண்டும். எவ்வளவுஉயரத்தில் வசிக்கிறோமோ, அவ்வளவு ஸௌக்கியமாம். ஏனென்றால் அங்கே சூரியகிரணங்கள், அடுத்தவீடுகளால் தடைபடாமல் அதிகநேரம் காணப்படும். மேலும் சுவாசிக்கும்காற்றில் தூசிகள் இரா.

கீழேவசிப்பவர்களுக்கு, தெருக்களினின்று கிளம்பும் தூசி நிறைந்த காற்றைத்தான் சுவாசிக்கும்படி நேரிடும்.

கக்கூஸ், குப்பைத்தொட்டி, ஜலதாரை முதலியவை ரொந்தியேகமாயிருத்தல் வேண்டும்.

7. நாம் வசிக்கும் அறைகளுக்குச் சமீபத்தில் கக்கூஸ்கள் இருத்தல்கூடாது. அவற்றிலிருந்து துர்நாற்றம் உண்டாவதுந் தவிர, அவை அநேக நோய்களுக்கு ஆதாரமாகின்றன. இது விஷயத்தில் கிராமவாசம் மிகவும் சௌக்கியமாம்.

புரோபேசர்-சுப்பரமண்ய ஐயர், புதுச்சேரி.

"ஆற்றுத லென்பதொன் றலர்ந்தவர்க் குதவுதல்."

(இதன்பொருள்.) இல்வாழ்க்கையை நடத்துதலென்று சொல்லுதல்மிடித்தவர் (வறியவர்)க்கு யாதானுமொன்றை உதவுதலாம்.

"போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை"

(இ-ள்.) ஒன்றைப் பாதுகாத்தலென்று சொல்வது கூடினரைப் பிரியாதிருத்தலாம்.

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்."

(இ-ள்.) மக்கட்பண்பு என்று சொல்லப்படுவது உலகவொழுக்கத்தை யறிந்தொழுகுதலாம்.

"அன்பெனப் படுவது தன்கிளை செறாமை."

(இ-ள்.) அன்பென்று சொல்லப்படுவது தன்சுற்றத்தாரைக் கெடாதிருத்தலாம்.

"அறிவெனப் படுவது பேதையார்சொன் னோற்றல்."

(இ-ள்.) அறிவென்று சொல்லப்படுவது அறியாதார் தன்னைப்பார்த்துச்சொல்லுஞ் சொல்லைப்பொறுத்துக்கொள்ளுதலாம்.

"செறிவெனப் படுவது கூறியது மறாமை."

(இ-ள்.) ஒருவரோடு ஒருவர்க்கு உறவு என்று கூறப்படுவது கூறியதொன்றைத் தாம் மறாதிருத்தலாம்.

"நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை."

(இ-ள்.) நிறையென்று சொல்லப்படுவது மறைந்தது ஒரு காரியத்தைப் பிறரறியாமலொழுகுதலாம்.

"முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்."

(இ-ள்.) முறையென்று சொல்லப்படுவது நமரென்று கண்ணோட்டஞ் செய்யாது அவர் செய்த குறைக்கேற்ப அவர் உயிரைக் கொள்ளுதலாம்.

"பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்."

(இ-ள்.) பொறையென்று சொல்லப்படுவது பகைவரைக் காலம் வருமளவும் பொறுத்திருத்தலாம்.

கலித்தொகை.

குசேலோபாக்கியானம்.

(முன் தொடர்ச்சி.)

பின்னர்க் கண்ணபிரான் குசேலமா முனிவரை நோக்கி, முனிவரே! உமக்கு விவாகமாயிற்றோ? உமது மனையாள் நற்குணமுடையவளா? உம்மிருவர் புகழையும் மறதியின்றிப் பாதுகாத்து வருகின்றனளா? உம்மைத் தனதுயிராகப் பாவித் துபசரித்து வருகின்றனளா? உமது வருவாய்க்குத் தக்கவாறு செலவுசெய்து வருகின்றனளா? நீர் சொன்னகாரிய மனைத்தையும் சொன்னபடி செய்துவருகின்றனளா? எத்தன்மையதாய வறுமை நேர்ந்தவிடத்தும் அதனைப் பலரறியக் கூறாததன்மை யுடையவளா? அற்பமாகவேனும் உம்மீது குறை கூறாது அமைந்திருக்குங் குணமுடையவளா? உமக்குப் புதல்வர்பலர் பிறந்திருத்தல் வேண்டுமே! உமக்கெத்தனை பிள்ளைகளிருக்கின்றனர்? அவர்கள் பெருஞ்சபையில் மேன்மையுறுமாறு அவர்தமக்குச் செய்யவேண்டிய வனைத்தையும் குறைவில்லாது செய்தீரா? அவர் தமக்குஉபநயனஞ் செய்தீரா? அவர்கள் இவர்களுடைய தந்தை யிவர்களைப் பெறுதற்கு என்ன தவஞ்செய்தானோ என்று அறிஞர் கூறுமாறு நன்மனமுடையவராய்ச் சாஸ்திராப்பியாசஞ் செய்திருக்கின்றனரா? இவர்கள் பாலுள்ள நற்குணங்கள் வேறெவர்பாலுண்டென அறிஞர் கூறுமாறு அவர்கள் ஒழுகுகின்றனரா? உம்முடைய புதல்வர்கட்கு நீவிர் அவர்கள் நினைத்த பொருளனைத்தையுங் குறைவின்றிக் கொடுத்து வருகின்றீரா? உச்சிப்போதில் பசித்துவருகின்றவரைத் திருமாலெனப் பாவித்து, அவர்கட் கன்னமிட் டுபசரிக்கின்றீரா? ஸ்நானம், சந்தியாவந்தனம், ஜபமுதலிய வைதிகக்கருமங்கள் செவ்வையாக நடைபெற்று வருகின்றனவா? இக்கருமங்களைச் செய்தற்கு உமதுடம்பு திடமாயிருக்கின்றதா? நீவிர் மறைப்பொருளை (திருமாலைத்) தியானிப்பது குறைவிலாது நிகழுகின்றதா? உமதூரிலிருந்து இவ்விடத்திற்கு வருகின்றவர் வாயிலாக நேற்றைவரைக்குந் தவறாது உமது க்ஷேமலாபங்களை விசாரித்தறிந்து கொண்டிருக்கின்றேன்; யாமிருவரும் விட்டுப் பிரிந்த பல வருஷங்களுக்குப் பின் இப்போது இன்பமிகுமாறு கூடினோம்.

பகைவர் சமீபத்திலிருந்தாலும் நட்புச் செய்யார்; நட்பினர் தூரத்திலிருந்தாலுந் தமது நட்பினின்றும் நீங்கார். தாமரையா

னது தன்னைச் சுற்றிப் பல பொருள்களிருப்பினும் அவற்றை நோக்குகின்றதா? ஆதித்தன் கதிரையன்றோ நோக்குகின்றது? அறிவில்லார் தம்முட்கொள்ளும் நட்புப் பேரின்பந்தருவதாம். அதற்குக் காரணம் அவர்கள் தம்முட் பிரியுங்காலத்தில் துன்பமடையாமையும், பின்னர் ஒருவரையொருவர் நினையாமையும், ஒருசமயத்திலேனும் தம்நட்புப்பற்றிப் பேசாதிருத்தலுமேயாம்.

அந்தண சிரேட்டரே! நீவிர் வசிக்கும் நாட்டில் அதிக மழை பெய்தலும், பெய்யவேண்டியமழை குறைதலும், கிளி, விட்டில், முதலியவற்றால் வரும்கேடும், கள்வர் செய்யுங்கேடும், காட்டுமிருக முதலியன செய்யுங்கேடும் இல்லாது மக்கள் சுகமாக வாழுகின்றனரா? யாமிருவோரும் இளமைப்பருவத்தில் சாந்தீப முனிவரது திருவடிகளை வணங்கி, அவரிடத்து வேதாப்பியாசஞ் செய்து வந்தகாலத்தில் மிகுப்பிரியமாகப் பேசிக்கொண்டிருந்த பேச்செல்லாவற்றையும் நினைத்துக்கொண்டிருக்கின்றீரா? சாந்தீப முனிவரது மனைவியார் நம்மைநோக்கி, நல்லபிள்ளைகளே! சமையல் செய்வதற்கு விறகில்லை; நீங்கள் சென்று விறகுகொண்டு வாருங்களென்றனுப்ப, யாம் ஒரு பெருங்காட்டினுள் நுழைந்து விறகொடித்துத் திரிந்தோமல்லவா? அப்போது மேகம் கறுத்து மின்னி பிடித்து பெருமழை பெய்ததல்லவா? மழை பெய்யும்போது விலங்குகள் பறவைகள் முதலிய பிராணிகளெல்லாம் மிகவும் அஞ்சினவன்றோ? காடு முற்று மசைந்ததன்றோ; ஆலங்கட்டிகள் பூசணிக்காயளவாக விழுந்தனவன்றோ? அவற்றிற்குப் பயந்து, யாமிருவரும் குருந்தமரத்தடியில் தங்கியும் கொன்றை மரத்தடியில் கூடியிருந்தும், அங்குள்ள மரங்களடர்ந்துள்ள ஊர்தோறும் போய்த் தங்கியும் திகைத்தோமல்லவா? பிறகு மலர் மரந்தோறுஞ் சென்று தங்கியும், உடம்பு முற்றும் நனைந்தும் வருந்தினோமல்லவா? நாம் மரங்களில் ஒடித்துச் சுமையாகக் கட்டித் தலைமீது வைத்திருந்த விறகும் நனைந்து விட்டதன்றோ? அப்போது பெய்ய ஆரம்பித்த மழைவிடாது பெய்தமையால், முன்னை வெள்ளம் புறங்காலளவாய், பின்னை கணைக்காலளவாய், அப்பால் முழங்காலளவாய், அதன்மேல் அரையளவாய்ப் பெருகிவிட்டதன்றோ? அவ்வாறு வெள்ளம் பெருகியதால் காட்டாற்றில் பெருவெள்ளம் வந்ததல்லவா? யாமிருவோரும் இப்பெருமழை நிற்காதிருக்கின்றது, இனியாம் செய்காரியம் யாது என்றாலோ

சனை செய்திருக்கும்போது ஒருகொடிய சுழல்காற்று விரைந்து வந்தடித்ததல்லவா? இவ்வாறு மழைபெய்தது நமக்கோர் அற்புதக் காட்சியாயிருந்ததன்றோ? இவ்வாருகப் பெருமழைபெய்த மேகம், தம்மிடத்துள்ள பொருளனைத்தும் இரவலர்க்கீந்து புகழென்னும் உடையையுடுத்திக் கொண்டுள்ள கொடையாளர் போன்று, தான்கடலினின்று மொண்டுவந்த நீரனைத்தையும் பெய்து வெளுத்ததல்லவா? மழை சூரியன் அஸ்தமனமாமளவும் பெய்துநின்றமைபால், பேரிருள்சூழ்ந்த அப்பெருங்காட்டில் யாம் இருவரும் ஒருவர் கையை ஒருவர்பிடித்துக் கொண்டு இதுமேடு இதுபள்ளமென்றறியாது குளிர்காற்றால் உடல்நடுக்கமடைந்து திக்பிரமங்கொண்டு, காலால் வழிதடவிச்சென்று, ஊர்க்குச் செல்லும் வழி இஃதென்றுணராமைபால், இருள்நீங்குமளவும் இவ்விடத்தி லிருப்போமென்று ஓரிடத்தை யடைந்து பட்டினியாய் வருத்தமுற்றிருந்தோமல்லவா? அன்றிரவு அங்கு அவ்வாறிருந்த யாம் சந்திரனுதயமான பின், பொழுதுவிடிதற்கடையாளமாகப் பறவைகளொலித்தலையும், கீழ்த்திசை வெளுத்துவருதலையும், நட்சத்திரங்கள் ஒளிமழுங்கிவருதலையும் கண்டு, ஒருவாறு தெளிவடைந்து, பிறகு சூரியனுதயமானவுடன் நமதாசிரியராகிய சாந்தீப முனிவர் அந்தோ! நமதுசீடர்களாகிய பிரமசாரிகள் காட்டிலெங்குச் சென்று யாதடைந்திருக்கின்றனரோவென்று கவலையுற்று முகம்வாடி நம்மைத்தேடிக்கொண்டு நம்மெதிரேவரக் கண்டன மல்லவா? யாமிருவோரும் அவரைக்கண்டவுடன் எதிரே சென்று நமஸ்காரஞ் செய்துநின்ற சமயத்தில், அம்முனிவர் பெருங்கருணைகொண்டு நம்மைநோக்கி, எனக்குத் தொண்டுபுரியும் மாணுக்கர்களுள் சுத்தராயிருப்பவர்களே! உம்மையொத்த மாணவர் எவருமிலர்; என்பொருட்டு நீங்கள் மழையால் நனைந்து அதனால் பெருந்துன்ப மடைந்தீர்கள். இவ்வாறு துன்பமடைந்தமையால், நீங்கள் என்னிடத்திற்கற்ற கல்விக்கடனைச் செலுத்திவிட்டீர்கள்; குற்றங்களனைத்தும் ஒழித்துவிட்டீர்கள். உங்களுக்குக் கல்விப்பொருளைப்போலச் செல்வப்பொருளும் நன்மனைவியரும், நன்மக்களும், நற்சுற்றத்தாரும், வாழ்நாளும் விருத்தியாகுக என்றாசீர்வாதஞ் செய்து, நம்மைத் தமது வீட்டிற்கழைத்துக் கொண்டு சென்றனரல்லவா? இவையெல்லாம் ஞாபகத்திலிருக்கின்றனவாவென்று தமது உண்மையில் வெளியாகாவாறு ஒரு

மானுடன்போல நன்றாகக்கேட்டு, பிறகு மிகுபிரியத்தோடு,பந்தமகன்ற பரமரே! நீவிர் பலநாள்கழிந்தபின் இவ்விடத்திற்குவந்தீர்; அவ்வாறு வந்த நீவிர் யானுண்பதற்கு என்னபட்சணம் கொண்டு வந்திருக்கின்றீர்? அந்தப்பட்சணத்தை யிப்போதே கொடுத்தீராயின், அது மிகநன்மையைத்தருவதாம்; நீவிர் தரும் சுவையுள்ள பட்சணத்தின்கண் என்மனம் சென்றிருக்கின்றது. எனக்கென்று சிற்றுணவு யாதேனுமில்லாது இவ்விடத்திற்கு நீர் வருவீரோ? வரமாட்டீரல்லவா? உம்முடைய மனத்தை இன்றுதானே யான் ஆலோசித்துணரவேண்டும்; உம்முடைய தேவியார் நீர் சும்மா போய்வரக்கடவீரென்று கூறுவரோ? யாதேனுஞ் சிற்றுணவு கொடுத்தே யிருப்பார்? அச்சிற்றுணவை யெனக்கல்லாமல் வேறு யார்க்குக் கொண்டுவந்திருக்கின்றீர்? அச்சிற்றுணவை இப்போதெனக்கு உண்ணக்கொடுப்பீராகவென்று கூறி, தமது கரத்தை நீட்டினார்.

கண்ணபிரான் இவ்வாறு கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த குசேலமாமுனிவர் யாம் கொண்டுவந்த இந்த அவலைக் கண்ணபிரானுக்கு உண்ணக் கொடுத்தல் நல்லாவின்பாலை யுண்ணுகின்றவனிடத்து மிகவும்புளித்துள்ள காடி நீரைக் கொடுத்து இதனை நீர் உண்ண வேண்டுமென்றுரைப்பது போலாமென்று கருதிச் சும்மா விருந்தார். இவரதுருகத்தையறிந்த கண்ணபிரான் அவர்தமதுடம்பின்மீதுபோர்த்துக் கொண்டிருக்கின்ற பழங்கந்தைத்துணியைச் சுருக்கி யெடுத்து, தமது பக்கத்தில்வைத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தனர்; அவ்வாறுபார்த்தபோது கற்பிற்கரசியாயும் குசேலர் மனைவியாயுமுள்ள சுசீலையார் செவ்வையாக முடிந்துவைத்துள்ள ஒரு முடிப்பைப்பார்த்து, அதனையவிழ்த்துநோக்கி, அம்முடிப்பிலுள்ள அவல்களுள் ஒருபிடி அவலெடுத்து, நமக்கிது நல்லதாகக் கிடைத்ததென்றுசொல்லி, மிகுபிரியத்துடன்தமது வாயிற்போட்டுக்கொண்டார். கண்ணபிரான் அப்பிடியவலை அவ்வாறுவாயில்போட்டுக்கொண்டபோது இவ்வவல் மிக்கசுவையினை யுடையது; தேவர்க்கும் கிடைப்பதற்கரியது; மிகு பிரியத்தோடு வீட்டிலிடித்தது; நாட்சென்றதுமன்று; விலைகொடுத்து வாங்கும் அவல் இவ்வளவு சுவையுடையதாமோ என்றும், இவ்வவல்களுள் ஒன்றற்கேனும் முனை முறிந்திருக்கவில்லை, முட்டையா யிருப்பதுமில்லை,

இவ்வவல் பட்டகையும் மணக்கும்; இவ்வவனுக்கு வெல்லமும் வேண்டுவதில்லையென்று கூறியும், தம்மிரண்டு கதுப்பிலும் அவ்வவலைப் பக்குவமாமாறு சிறிதுபோதடக்கி வைத்திருந்து, நன்றாகமென்றுமென்று, தலையைப் பலமுறையசைத்து, நமக்கு அவலில் மிகுபிரியமுண்டென்று யாராவது சொல்லக்கேட்டிருக்கின்றீரோ? எனக்கவலில் மிகுபிரியமுண்டென்று முன்னர் உம்மிடத்துக் கூறியதில்லையேயென்று கூறியும், அன்புடன் கொடுத்த பொருள் இழிந்ததாயிருப்பினும் சிறந்த பொருளேயாம்; அன்பில்லாது கொடுத்தபொருள் சிறந்ததாயிருப்பினும் இழிந்தபொருளேயாம் என்பதற்குக் காரணமாகப் பெருந்தவமுடையவராகிய குசேலரது அன்பினையுங்கூட்டி, உண்டருளினர். கற்றவர் புகழ்ந்துபோற்றும் கண்ணபிரான் குசேலர் கொண்டுவந்த அவலில் ஒருபிடி அவலெடுத்து விபந்து பேசியுண்டபிறகு மற்றொருபிடி யவலெடுத்து வாயில்போட்டுக்கொள்ளப்போனர்; அச்சமயத்தில்உருக்குமணிப் பிராட்டியார் விரைந்தெழுந்தோடிவந்து, தமது நாயகராகிய கண்ணபிரானது காத்தினை எடுத்த அவலை வாயிற்போட்டுக் கொள்ளாவாறு பிடித்துக்கொண்டனர். உருக்குமணியார் விரைந்தெழுந்தோடிவந்து, கண்ணபிரானது காத்தினைப் பிடித்துக்கொண்டகாட்சியானது ஒருசிறிய பெண்யானை விரைந்தோடி வந்து, நெய்விரவிய கவளத்தைக்கொள்ளும் ஒரு பெரிய மதயானையின் காத்தினைப் பிடித்ததுபோன்றிருந்தது.

இவ்வாறு சுகமுனிவரருளிச் செய்ததைப் பரிச்சித்து மகாராஜன் கேட்டு, ஐயமுற்றெழுந்துவந்து, அம்முனிவரைத் தொழுதெதிரேநின்று, சுவாமிகள் அருளிச்செய்தது அற்புதமாயிருக்கின்றது. நாயகன் ஆசையோடுண்பதை நடுவேபுகுந்து தடுக்கும் மாதர்கள் நற்குணமுடையவராவரோ? சிவபெருமான் பாற்கடலிற்றோன்றிப் பாவிவந்த விஷத்தைத் தம்காத்திலெடுத் துண்ணுகின்ற காலத்திலும் அவர்தம் இடப்பாகத்திலெழுந்தருளியிருந்த உமாதேவியார் அதனைத்தடைசெய்த தில்லையே? கணவன்உண்ணுமாறு விரும்புகின்ற வுணவுகளை யெல்லாம் மனைவியர் எடுத்தெடுத்துக் கொடுத்து உபசரிப்பதல்லாமல், நற்குணமில்லார் போன்று தடுப்பது அவர்க்குத் தகுதியுடையதாமோ? மருத்துவர் இவ்வுணவினையுண்பது கூடாதென்று விலக்கிய உணவினைத் தமது கணவ

ருண்ண விரும்புவானாயின், மனைவியர் அதனையுண்ணுதல் தீயதென்று அவனுக்குக் கூறுவரேயன்றி, அதனைத் தடைசெய்யார்; அவனவ்வுணவினை யுண்டதுபற்றிப் பின் சிந்தைநைந்து வருந்துவர். நாயகன் ஒருகாரியத்தைப்பற்றி யாலோசித்து உண்டல் உறங்கல் முதலியவற்றைக்கவனியாதிருக்குங் காலத்திலும் மனைவியர் அன்பின்மிகுதியால், அவன் பிரியமாயுண்பதற்குரிய உணவினைச் சேகரித்துக்கொண்டு, இவ்வுணவினைச் சாப்பிட்டுப் பாருங்களென்று, அவனுக்குணவினை யுண்பிக்குங் குணமுடையவராவர்; நல்லோர் கற்புடையபெண்கள் சுமந்திரிகளை பொத்த அறிவுடையவராய்,குடும்பப்பணிபுரிவதில் பணிப்பெண் போன்றவராய், கணவனுக்கு உணவிடும்போது தாய்போன்றவரா யிருப்பரென்று கூறுகின்றனரன்றோ? உருக்குமணி பிராட்டியார் கண்ணபிரானது மற்றொரு பிடியவலுண்ண வேண்டுமென்னுமெண்ணம் கெடும்படி, அவல் உண்ணுதலைத் தடுத்தது யாதுகாரணம்பற்றி? என்றுவினவினான்.

இவ்வாறு வினவிய பரிச்சித்து மகாராஜனைச் சுகமுனிவர் நோக்கி, வேந்தர் வேந்தே! உயர்குடிப்பிறப்பினுதித்து, கற்பிற்கரசியாய் அழகிற்கோரழகாய், திருமகளம்சமாய், நற்குண நற்செய்கைகளுக்கெல்லையாய், பெண்களுக்குரிய இலக்கணங்களெல்லாம் நிரம்பப்பெற்று விளங்கும் உருக்குமணிபிராட்டியார் தாம் தொழுந் தெய்வமாகிய கண்ணபிரானுக்குத் தீமைசெய்தது எப்போதுமில்லை; கண்ணபிரான் மனத்திற்கு விரோதமாக எந்தக்காரியத்தையும் மறந்தேனும் செய்ததில்லை; அவர்க்கு விரோதமாக எதனையும் பேசியதேயில்லை; தம் மனம் விஷயங்களிற் செல்லுமாறு ஒழுகியதேயில்லை. அவ்வுருக்குமணிபிராட்டியார் கண்ணபிரான் குசேலமாமுனிவர்க்கு இவ்வுலகத்தில் அளவிறந்த பெருஞ்செல்வமுண்டாவதாகவென்று சங்கற்பித்து, அம்முனிவர் கொண்டுவந்த அவலில் ஒருபிடியவலெடுத்து, இனிமையாகவுண்டாரென்றுணர்ந்தாராதலின், இப்பிடியவலையும் உண்பாராயின் அக்குசேலமாமுனிவர்க்கு அவர் அளவிறந்த காலம் இட்டவேலைசெய்யும் ஏவலாளாயிருக்கவேண்டுமேயென்று கருதி, தமதுகணவர் மற்றொருபிடியவலெடுத்து வாயிற்போட்டுக்கொள்ளப் போகும்போது, அதனையுண்ணாவாறு விரைந்தோடி வந்து, அவர் கையைப்பிடித்துத் தடுத்தனர். மேலும், அம்முனிவரது இல்வாழ்க்கைக்கு வேண்டுவது பெருஞ்செல்வமேயாம்;

கண்ணபிரான் அதற்குப் பணியாளராயிருப்பது அவசியமல்லவே; ஆதலின், உருக்குமணிபிராட்டியார் தமது கொழுநனாகிய கண்ண பிரானுக்கு நன்மையுண்டாமாறு மற்றொரு பிடியவலெடுத்துண்ண ப்போவதைத் தடுத்தது நியாயமேயாம்; அது தவறாகாது. கண்ண பிரான் தன்மீது அன்புடையார்க்கு இதனைக்கொடுக்கலாம், இத னைக் கொடுத்தல் கூடாதென்று கருதுவதேயில்லையாம். பரிச்சித் வேந்தே! உலகிலொருவன் தானறியாமலே சிறிதறத்தைச்செய் தானாயின், அவன் அவ்வறத்தின்பயனாக மறுமையிற் சுவர்க்கலோ கத்தை யடைந்து பேரின்பத்தை யனுபவிப்பானென்று அறநூல் கள் கூறுமாயின், கண்ணபிரானது மலரடிகளை மனமலரின்கண் வைத்து இடைவிடாது தியானிக்கின்றவரும் இந்திரியச்சேட்டை களை எள்ளளவுமில்லாவாறு கெடுத்தவருமாகிய குசேலமுனிவர் க்கு நெடுங்காலம் வரையாது வழங்கினும் தொலையாதாகிய இப் பெருஞ்செல்வம் கிடைப்பது அரியதாமோ? என்று கூறிமுடித் துப் பின் நிகழ்ந்ததைக் கூறுவாரானார். (வரும்.)

விவேகானந்த சுவாமிகளது அருள்வாக்கியத் திரட்டு.

(முன் தொடர்ச்சி)

கடவுளுடைய அருளையும் அவரது மேன்மை வாய்ந்த புத் திரர்களுடைய கிருபையையும் பெறு. கடவுளை யடையக்கூடிய மார்க்கங்கள் இவை இரண்டுந்தாம். கடவுளுடைய ஞான புத்தி ரர்களின் சாங்கத்தியம் கிடைப்பது மிக அரிது. அன்னோர்களிடத் தில் ஒரு ஐந்து நிமிஷம் சாங்கத்திய முண்டாயின், நீவேறு மனித னாக ஆய்விடுவாய். உண்மையாக நீ இதை விரும்பினால் அத் தகைய புருஷர் ஒருவர் உன்னிடம் வருவார். கடவுள் நேசிக்கும் புருஷர்களின் சன்னிதானம் அன்னோரிருக்கும் இடத்தைப் பரி சுத்தப் படுத்துகின்றது. கடவுளின் புத்திரர்களுடைய மகிமை அத்தன்மையதாகும். அவர்களைக் கடவுளுக்கு வேறுபட்டவர் என்றுமதித்தல் கூடாது. அவர்கள் பேசினால் அவர்களுடைய சொற்கள் வேதவாக்காகும். அவர்களிருந்த இடம் அவர்களுடைய பரிசுத்தமென்னும் அதிர்சிய சலனத்தால் வியாபக மடைந்தது. அந்த ஸ்தலத்தில் செல்லும் எத்தன்மையருடைய மனதிலும் அச் சலனம் புகுந்து அங்கிருக்குமளவாயினும் அவர்கள் மனதில் பரி

சுத்த உணர்ச்சியை யுண்டு பண்ணுகிறது. அவர்களுக்குப் புனிதத் தன்மையை யடையும் புத்தியையும் உண்டாக்குகிறது. அவ்விதப் பக்தர்களுக்குச் சாதி கல்வி, அழகு, பிறப்பு, செல்வம், தொழில் முதலிய வித்தியாசம் கிடையாது; ஏனெனில், யாவும் கடவுளுடையனவென்று ஐயந்திரிபறத் தெரிந்து கொண்டமையின்.

கெட்ட சகவாசத்தை முற்றிலும் விட்டுவிடு. முக்கியமாய் முதலில் இப்படிச் செய்யவேண்டும். உன் மனதைச் சிதறச்செய்யக்கூடியஉலகசகவாசத்தைத்தடு. யான்எனது என்றபாவற்றையும் விட்டுவிடு. பிரபஞ்சத்தில் என்னுடையது என்பது ஒன்றுமில்லாதவன் எவனோ அவனிடத்தில் தான் கடவுள் வருகிறார். உலக ஆசையாகிய பந்தத்தின் கட்டையவிழ்த்து விடு. சோம்பலை மீறிச் செல். எவ்வாறாக ஆய்விடுவோமோ என்ற கவலையைத் தாண்டிச் செல்லு. நீ செய்த கர்மத்தின் பலனைப்பற்றி ஒரு பொழுதும் சிந்திக்காதே. எல்லாவற்றையும் கடவுளுக்குச் சமர்ப்பித்துவிட்டு உன் வேலையைப்பார். அதுபற்றி யோசிக்காதே. ஆத்மா முற்றும் தைலதாரைபோல இடையறாது கடவுளிடஞ்செல்லத்ததும்புகிறது. பணம் சம்பாதிக்க நேரமில்லை. பேரும் புகழும் நாடப் பொழுதில்லை. கடவுள் தவிர வேறொன்றையும் சிந்திக்கக் காலமில்லை. இவ்வித உணர்ச்சி எப்பொழுது உதயமாகிறதோ அந்தத்தருணத்தில் தான் அளவிடப்படாத அதிசயிக்கத்தக்க பிரேமானந்தமானது நமது இருதயத்தில் ஜனிக்கும்; ஒவ்வொரு நிமிஷமும் கடவுள்மேலிருக்கும்பிரேமையானது அதிகரிக்கும். இஃதன்றியும் இந்தப் பிரேமரசமானது தெவிட்டாமல் எக்காலத்தும் புதிதாகவேயிருந்து ஸ்வானுபவத்தில் மாத்திரந்தான் ஓர்ந்துணரக் கூடியதாயிருக்கின்றது. எல்லாவற்றிலும்பிரேமையானது அதிகச்சுலபமானது. அது தருக்கத்திற்காகக் காத்துக்கொண் டிருப்பதில்லை. அது சுபாவசித்தமாயுள்ளது. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுவதில்லாதது போல நமக்கு ருசு வேண்டியதில்லை; அத்தாக்ஷியும் வேண்டியதில்லை. யுக்தியென்பது யாதாவதொரு வஸ்துவை நமது மனதால் வரையறைக்குட் படுத்துவதாகும் ஒரு வலையை வீசி ஏதோ ஒன்றைப் பிடிக்கிறோம்; பிறகு அதனை விளக்கிக்காட்டியதாகக் கூறுகின்றோம். ஆனால் கடவுளை ஒருவலையில் பிடிக்கக்கூடுமென்பது ஒரு பொழுதும் இயலாத காரியம்! ஒருபொழுதும் இயலாத காரியம்!

பிரேமையானது யாதொன்றினோடும் பிணைப்பட்டதன்று. நாம் தப்பிதமாய் நேசிக்கும்போது அது நிசபக்தியின் தன்மையைத் தாம்; நிச ஆநந்தத் தன்மையு மாகும். நாம் எவ்விதமாக உபயோகித்தபோதிலும் சக்தி ஒன்றே. அதில் என்னவித்தியாச மிருக்கிறது? சாந்தியும் ஆனந்தமும் பிரேமையின் வடிவாகும். ஒரு கொலையாளி தன் குழந்தையை முத்தமிடும்பொழுது குழந்தையின் மேலிருக்கும் அன்பைத்தவிர மற்றெல்லாவற்றையும் அத்தருணத்தில் முற்றும் மறந்துவிடுகிறான். நான் என்பதை விட்டுவிடு. கோபம் காமம் இவைகளினின்றும் வெளிவந்து விடு. எல்லாவற்றையும் கடவுளுக்குச் சமர்ப்பித்து விடு. நானில்லை, நீ உள்ளாய்; கிழமனிதன் முற்றிலும் மறைந்து விட்டான்; நீ தான் எஞ்சி நிற்கின்றாய்; நான் தான் நீ. ஒருவரையும் நோவாதே. உனக்குக் கெடுதி சம்பவிக்குமாயின் கடவுள் உன்னுடன் விளையாடுகிறாரென்று தெரிந்துகொண்டு அதிகக் களிப்புடன் இருப்பாயாக. (வரும்)

பெ. மாணிக்கசாமி முதலியார், பீ-ஏ.

கல்வியின் மாட்சி.

ஒரு சம்பாஷணை.

(முன் தொடர்ச்சி.)

சர்வ கலாநிதி:—அன்பினால் என்மனதைக் கவர்ந்த அருமைச் சீடனே! நீ படித்துப் பயனைக் கிரஹிக்ககூடிய நூலை முதலிற் படிக்கவேண்டும்; பிறகு சிறிது சிறிதாக நம்முன்னோர் எழுதி வைத்துள்ள பழைய நூற்களைக் கற்கவேண்டும். அப்படிப் பழைய நூற்களைப் படிப்பதால் நமது முன்னோர்கள் இவ்வளவு சிறந்த நூல்களை எழுதியிருக்கிறார்கள், தேசம் அக்காலத்தில் இவ்வாறு இருந்தது என்ற உணர்ச்சியையும் பெற்றுக் கல்விச் செல்வம் பொருட்செல்வம் ஆகிய இருவகைச் செல்வத்திலும் தேசத்தை இன்னும் சிறப்புறச்செய்யும் அறிவைப் பெறலாம். மஹாபாரதம், பாகவதம், கதாஸரித்ஸாகரம், காதம்பரீ முதலிய நூற்களைப் படிப்பதால் ஆராய்ந்தறியும் சக்தி விருத்தியடையும். சிறந்த நூற்களைப் படிப்பதனால் சிறந்த கருத்துகள், அக்கருத்துகளைத் தெரிவிக்கும் சொற்றொடர்கள் முதலியவற்றில் ஆனந்தமுண்டாகிக் கருத்துகளை உள்ளதை உள்ளவாறு வெளியிடும்

பதங்களை உபயோகியாமல்தெளிவின்றிச்சுற்றிச்சுற்றிச்சொல்லும் நூற்களை விலக்கலாம். எஜமான் எதனைச் சொல்லினும் ஸேவகன் மறுக்காது செய்யவேண்டியது போல், மறைகள் எதைக்கூறினும் அதனை விலக்காது செய்தே தீரவேண்டும். நண்பன் கூறும் நன் மொழியைத் தவிர்க்காது கேட்டு நடப்பதுபோல் மறைகளின் கருத்தை ஒளிக்காது விரித்துக் கூறும் ஸ்மிருதிவாக்கியத்தைக் கடவாது நடக்கவேண்டும். நங்கையர் கூறும் நன்மொழியிற் றீய வற்றை நீக்கி நல்லவற்றை மட்டும் கிரஹித்து நடப்பது கடமை போல், காவியங்கள் கூறும் தீயசொற்களைக் கிரஹிக்காது நல்ல வற்றைமட்டும்கிரஹித்து நடக்கவேண்டும். இதுபோன்றவைகளைப் பழைமையான நூற்களைப் படியாதுதெரிந்துகொள்வதரிது. பாஷா ஞானத்தை விருத்திசெய்து கொள்வதற்குக்கல்வி இன்றியமையா தது. இவ்விஷயத்தைப்பற்றி லார்டு மார்லி அவர்கள் சொல்வது யாதெனின், உலக வாழ்க்கையில் பெரும்பயன் அடைய விரும்பு வோர் மனத்தூய்மையும் நல்லெண்ணமும் உடையவர்களாயிருக்க வேண்டும். மற்றக் கல்வியைவிடப் பாஷாஞானமே நல்லெண்ணங் களையும் மனத் தூய்மையையும் உண்டுபண்ணக்கூடிய தாகையால் பாஷா ஞானத்தை விருத்திசெய்து கொள்ள யாவரும் முயற்சி செய்வதவசியமாம் என்பதே. ஆதலால், நீ ஒரு பொழுதும் காலத்தை வீணே கழிக்காமல் பழைய நூற்களைப் படித்து அறிவை விருத்திசெய்துகொள்.

ஆனந்த சாகரன்:—அவனியின் கண் அவதரித்த அமரகுரு வே! கல்வி என்பதன் உண்மைப் பொருளை அறிய விரும்புகின் றேன். அடியேன் மீது கிருபை கூர்ந்து அநுக்கிரஹித்தால் கிருதார்த்தனாவேன்.

சர்வகலாநிதி:—உள்ளதை யறிய விரும்பும் உத்தம புருஷ! சொல்லுகிறேன் கேள். கல்வியென்பது சுத்த அத்விதீயப் பொருள். ஞானம், கல்வி, புத்தி, கலை, பிரகாசம், அறிவு, காணம், ஆற்றல், போதம், கேள்வி, தேர்ச்சி, விஞ்சை, ஊதியம், ஒதி, உறுதி, ஜாலம் இவையாவும் கல்வி யென்னும் வாசகத்தின் அர்த்தத்திலேயே தமது வாசகத்தின் சக்திவிருத்திகளை உடைத் தாயிருக்கின்றன. இவையாவும் ஒரே அர்த்தத்தின் வாசகங்கள். இதுபற்றி,

"உலவிய விஞ்சை வித்தை யூதியம் ஜால மோதி
கலையுட னுறுதி கேள்வி யிருநான்கும் கல்வி தன்பேர்"

என்று சூடாமணியிற் கூறியுள்ளது இங்கு நன்குணர்தற்பாலது. நையாயிகர்களும் ஞானம் புத்தி என்னும் இரண்டுபதங்களும் ஒரு அர்த்தத்தின் வாசகமேயென்று கூறியிருக்கின்றனர். ஆனல் அவர்கள் மதத்தில் அத்வைதம் சித்திக்காமைபால் இக்கல்வியென்னும் புத்தியைக் குணபதார்த்தமாக அங்கீகரித்து இதனை ஆத்மாவின் குணமாகக்கொண்டிருக்கின்றார்கள். இக்கொள்கை மறைகளுக்கு விரோதமானது பற்றி இதைக் கொள்ளற்க. இது நிற்க. நமது வேதாந்தம் ஆத்மா இரண்டற்றதும், நிர்க்குணமுமென்று கூறுவதால், ஆத்மாவே வித்திபாஸ்வரூபமாக, அல்லது வித்தையே ஆத்மஸ்வரூபமாக விருக்கின்றது. இதனை மனத்திற்கொண்ட தாயுமானவரும்:—

"கூடுத லுடன்பிரித லற்றுநிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரித லற்றுக்
குணமற்று வரவினொடு போக்கற்று நிலையான
குறியற்று மலமுமற்று" என்று ஆத்ம வஸ்துவுக்குக் குண

பதார்த்தம் சமவாய ஸப்பந்தமாயில்லை எனக்கூறினர். நாம் இயல்பாகவே வித்தியா சொரூபமான படியால் அற்பஞானத்தால் வெளிப்பொருள்களின் ஞானம் சித்திக்கின்றது. இப்படிக்கின்றிச் சிறிதுங் கல்வி நம்மிடத்தில்லாவிடில் நமக்கு யாதொரு ஞானமும் உண்டாகாது. இக்கருத்தைக் கொண்டே தாயுமானவர்

"எல்லா மறிந்தவரு மேதுமறி யாதவரு
மில்லையெனு மிவ்வுலக மீது" என்றார்.

உலகில் யாவும் வித்தியா ஸ்வரூபமாயும் குருஸ்வரூபமாயுமிருக்கின்றன. உதாரணமாக:- ஒரு குடத்தை எடுத்துக்கொள்வோம். இதனை நமது நேத்திராதி ஐம்புலன்களால் உணரும்போது இந்த அற்பமாகிய குடத்தினின்றும் எவ்வளவு அரிய விஷயங்கள் நமது ஞாபகத்திற்கும் அறிவுக்கும் எட்டுகின்றன; இது திருஷ்டி கோசரமான ஒரு பொருளென்றும், சிவபபுதிறமுடைய தென்றும், பார்த்திவாம்சமென்றும், பிருதிவியில் பதினன்கு குணங்களுண்டென்றும், கந்த முடையதென்றும், பஞ்ச பூதங்களில் ஒன்றென்றும், பரமாணு முதலிய

அணுக்களின் காரியமென்றும், இக்குடத்திற்குக் கபாலம் - ஸமவாயிகாரணமென்றும், கபாலத்தின் சேர்க்கை அஸமவாயி காரணமென்றும், தண்ட முதலியவை நிமித்தகாரணமென்றும், குடத்தைக் குறித்து கபாலம் ஸமவாய ஸம்பந்தத்தால் காரணமென்றும், குடத்தின் ரூபத்தைக் குறித்து கபாலரூபம் ஸ்வஸமவாயிஸமவேத ஸம்பந்தத்தால் காரணமென்றும், கபாலத்தன்மை கழுதை முதலியன அன்னியதா சித்தங்கள் என்றும், இன்னும் அநேக ரஹஸ்ய ஸ்வரூப வியக்திகளும் ஒவ்வொரு பிரிவிலும் கிளைகளாகிய எண்ணத் தொலைபாத உட்பிரிவுகளும்முறையே தத்தமது ஜாதிகளும் விளங்குகின்றன. இவ்விஷயங்களுக்குக் குடம் முதலியவை நமக்குக் குருவாகின்றன.

ஆனால், இக்கல்வியும், 1. ஜடப்பிரகாசம், 2. சத்பிரகாசம், 3. ஸச்சித்பிரகாசம், 4. சிதானந்தப்பிரகாசம், 5. ஸச்சிதானந்தப் பிரகாசம் என ஐவகைத்து. பிரகாசம் என்பது ஒளி, அறிவு, ஞானம், கல்வி எனப் பொருள்படும்.

1. ஜடப்பிரகாசமென்பது தனதியற்கையறிவினையும் பிறவற்றினியற்கைப் பிரமாணங்களையு மறியும் வல்லமையற்று ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களின்விகாரபேதமின்றிக்கேவலம் ஜடம்போல் விவகாரத்தில் தோற்றுமாறு அவஸ்திதி செய்வதாம்.

2. சத்பிரகாசமாவது ஸ்தூல சரீர வியாபாரமாகிய பருத்தல், இளைத்தல், தோற்றல், மறைத்தல் ஆகிய இந்நான்குவித வியபாரமுடையது.

3. ஸச்சித் பிரகாசத்திற்கு ஸ்தூல சூக்ஷ்ம தேகவிகாரபேதஸ்ரூப வியாபாரங்களோடு தனதியற்கை வெளித் தோற்றத்தினையும் பிறவற்றினியற்கை வெளிப் பிரமாணங்களையும் அறியும் வல்லமையும், நான்கு வேதம் இவைகளி னந்தர்க்கதமாயும்,தாமஸ ராஜஸகர்மங்களை ஏவுகின்றதாயுமிருக்கிறஆயுள்வேதம், தநுர்வேதம், நீதி சாஸ்திரம், தரும சாஸ்திரம், கணிதம், காந்தருவ சாஸ்திரம், சிற்பசாஸ்திரம், இலக்கணம், யோகம், மாந்திரீகம், ஜாலம், சகுன சாஸ்திரம் காமசாஸ்திர, முதலிய நூற்களில் பிரவர்த்தியும், கடவுளிடம் நிவிர்த்தியுமுண்டு.

4. சிதாநந்தப் பிரகாசமோ முன் கூறிய ஸச்சித் பிரகாசத்திற்குள்ள சில இலக்கணங்களுடன் சாத்துவிக கன்மங்களை

ஏவுகின்ற கர்மகாண்டம் உபாசனா காண்டங்களில் பிரவிர்த்தியுடனும் ஈசுவர விஷயஞானத்துடனும் கூடியிருப்பது.

5. ஜீவபரமாத்மாக்களுடைய ஐக்கிய சொரூப மோக்ஷத்தை அளிக்கக்கூடிய அத்வைதப் பொருளாகிய சுத்தப்பிரஹ்மத்தைபறிந்து பேரின்பவாரியில் மூழ்கச் செய்யும் ஞானகாண்டமே ஸச்சிதானந்தப் பிரகாசம். இதற்குப் பரவித்தை யெனப் பெயருண்டு.

நியாய சாஸ்திரத்திற்குணம் ரூபம், ரசம், கந்தம், ஸ்பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், ஸம்யோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், ஸ்நேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இராகம், துவேஷம், பிரயத்னம், தர்மம் அதர்மம், ஸம்ஸ்காரம் என இருபத்து நான்கு வகைத்து. ஸமவாயிகாரணத்திற்கு இலக்கணம் எதன் கண் சமவேதித்துக் காரியந்தோன்றும் அது சமவாயிகாரணம். எங்ஙனம் நூற்கள் ஆடைக்குச்சமவாயி காரணம்; நூலின் கண்ணே ஆடை சமவேதித்துத் தோன்றும். அசமவாயி காரணத்திற்கு இலக்கணம், எது ஸமவாயி காரணத்தனுகியிருப்பதும் தணிந்த காரணத் தன்மையுடையதுமா யிருப்பது அது அஸமவாயிகாரணம். எங்ஙனம் ஆடைக்கு நூலிணையபு அசமவாயி காரணம். நிமித்த காரணத்திற்கு இலக்கணம்—யாதொன்று சமவாயி காரணமும் அசமவாயி காரணமுமன்றாய் மற்றுங் காரணமாம் அது நிமித்த காரணம். எங்ஙனம் நாடா முதலியன ஆடைக்கு நிமித்தகாரணம். நியாய நூலின் விரிவை விருத்திப் பிரபாகரத்தில் காண்க.

M. M. நாராயணசாமி ஐயர்,
முடிகண்டான்.

யுத்தம்.

ஐரோப்பாவில் நடைபெறும் யுத்தம் இப்போது மிகு உக்ரமாக நடைபெறுகின்றதென்று தெரிகின்றது. மேற்கரங்கத்தில் ஜெர்மானியர் மிகுந்த சேதமடைந்து வருகின்றனரென்று தெரிகின்றது; கலேயிக்கு மீட்டும் போக அவர்கள் முயற்சி செய்தமை பயன்படவில்லை. பிரான்ஸ் பெல்ஜிய எல்லையில் நடக்கும் போரில் நேசராஜாங்கத்தார் முன்னேறிச் செல்லுகின்றனரென்று தெரிகின்றது.

கீழரங்கத்திலும் ஜெர்மன் ஆஸ்டிரியச் சேனைகளின் வன்மை குறைந்து வருகின்றது. கலீஷியாவிலும் கார்ப்பேதியன் மலைப்பிரதேசத்திலும் மிகு உக்ரமாகச்சண்டை நடைபெறுவதனால் இருகட்சியாருக்கும் மிகுந்த சேதம் விளைந்திருக்கின்றது. இவ்விடத்தில் ஜெர்மன் சக்ரவர்த்தியாரே முன்னின்று போரை நடைபெறச் செய்து வந்தார். அங்குத்தமக்கு வெற்றியொன்றும் கிடைக்காமையைக் கருதி அவ்விடத்தினின்றும், இத்தலி எல்லைப்புறத்துச் சண்டையை நடத்த வந்திருக்கின்றார்.